**<u>சுருக்கம்</u>**

சிலை அமைத்தல்–புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரில் தெற்கு 4–ஆம் வீதி அண்ணா சிலையிலிருந்து, ஆலங்குடி செல்லும் சாலையும் கிழக்கு 4–ஆம் வீதியும் சந்திக்கும் இடத்தில் நகரளவு எண்.5550, சின்னப்பா பூங்கா கிழக்குப் பகுதியில் திருவள்ளுவரின் வெண்கலத்தினாலான திருவுருவச் சிலை அமைத்தல் – அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை (நிலை) எண்.118 நாள் 18.6. 2010

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள் 20.11.1998.

மேலும் படிக்க:

2. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் கடிதம் ந.க. எண். சி3/ 14411/08, நாள் 25.1.2010.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண். 9792/ 2010/எம்.1, நாள் 18.5.2010.

-----

**<u>ஆணை:</u>**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரில் தெற்கு 4ஆம் வீதி, அண்ணா சிலையிலிருந்து ஆலங்குடி செல்லும் சாலையும், கிழக்கு 4ஆம் வீதியும் சந்திக்கும் இடத்தின் அருகில் சின்னப்பா பூங்கா திடலின் கிழக்குப் பகுதியில் திருவள்ளுவரின் வெண்கலத்தினாலான முழுவுருவ சிலை அமைத்து முன்பகுதியில் பூங்காவும் வைத்து வளைச்சுற்று அமைத்து சிலை நிறுவ அரசின் அனுமதி பெற்றுத் தருமாறு புதுக்கோட்டை திருவள்ளுவர் சிலை அமைப்புக் குழுத்தலைவர் கோரியுள்ளதாகவும், நிறுவ இருக்கும் அய்யன் திருவள்ளுவர் சிலையின் பராமரிப்பினை எக்காலத்தும் திருக்குறள் கழகமே ஏற்றுக்கொள்ளும் எனவும், பிற்காலத்தில் நெடுஞ்சாலை மற்றும் நகராட்சியின் மேம்பாட்டிற்காகவோ, அல்லது வேறு காரணங்களினால் சிலை அகற்றும்படி நேரிட்டால் திருக்குறள் கழகம் மனமுவந்து சிலையினை வேறு தகுந்த இடத்திற்கு தன்னுடைய சொந்த பொறுப்பிலேயே மாற்றி அமைத்துக் கொள்ளும் என்றும் உறுதி அளித்துள்ளார் என தெரிவித்துள்ளார்.

2. புதுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலர் தனது அறிக்கையில் சிலை அமைக்கப்படவுள்ள பிரஸ்தாப புலத்தின் நகரளவு எண்.5550 ஆகும் எனவும், இதில் சிலை வைப்பதால் பொதுமக்களுக்கு இடையூறு ஏதும் இல்லை எனவும், புதுக்கோட்டை ஆலங்குடி பிரதான சாலை விரிவுப்படுத்தப்படும்போது சிலை வைக்கும் இடம் பாதிப்புக்குள்ளாகுமா என்பது குறித்து நெடுஞ்சாலைத்துறையினரின் கருத்தினையும் பெற்று சிலை அமைக்க அனுமதி வழங்குவது குறித்து பரிசீலிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். புதுக்கோட்டை

காவல் கண்காணிப்பாளர் தமது அறிக்கையில் புதுக்கோட்டைநகரம் தெற்கு 4ஆம் வீதி, கீழ 4ஆம் வீதி சந்திப்பிலுள்ள சின்னப்பா பூங்கா திடலில் திருவள்ளுவர் சிலை அமைப்பதால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் எவ்வித இடையூறுமில்லை என தெரிவித்துள்ளார்.

3. புதுக்கோட்டை நெடுஞ்சாலைத் துறை கோட்ட பொறியாளர் தமது அறிக்கையில், புதுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான சின்னப்பா பூங்காவில் திருவள்ளுவர் சிலை அமைப்பதால் பிரதான சாலையான மாநில சாலை எண்.26—ல் செல்லும் வாகனப் போக்குவரத்து ஓட்டுனர்களுக்கு பார்வைத் தடையில்லாமலும், எவ்வித இடையூறும் ஏற்படக்கூடாது என்றும் எதிர்காலத்தில் மேற்கண்ட இடம் சாலை அகலப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டிற்குத் தேவைப்படும் தருணத்தில் சிலை அமைப்புக் குழுவினரின் முழு பொறுப்பிலும், செலவிலும் அகற்றி தர முன் வரவேண்டும் என்ற நிபந்தனையுடன் தடையின்மைச் சான்று வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

4. புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் தமது அறிக்கையில், புதுக்கோட்டை நகராட்சி அண்ணாசிலையிலிருந்து ஆலங்குடி செல்லும் சாலையும் மற்றும் கிழக்கு 4—ம் வீதியும் சந்திக்குமிடத்தில் உள்ள நகரளவு எண்.5550, சின்னப்பா பூங்கா கிழக்கு பகுதியில் திருவள்ளுவர் சிலை அமைக்க நகர்மன்றத்தின் 30.6.2008ம் தேதிய தீர்மான எண்.104—ன்படி அரசின் ஒப்புதல் மற்றும் இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, சென்னை அவர்களது அனுமதி பெற்று அரசின் உத்தரவுப்படி சிலையை நிறுவிக்கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

5. எனவே, புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை நகரம், அண்ணா சிலையிலிருந்து ஆலங்குடி செல்லும் சாலையும் மற்றும் கிழக்கு 4—ம் வீதியும் சந்திக்கும் இடமான புதுக்கோட்டை நகரளவு எண்.5550, சின்னப்பா பூங்காவில், திருவள்ளுவர் சிலை அமைக்க, புதுக்கோட்டை திருக்குறள் கழகம் திருவள்ளுவர் சிலை அமைப்புக்குழுவினருக்கு, திருவள்ளுவர் சிலையின் பராமரிப்பினை எக்காலத்தும் திருக்குறள் கழகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாநில சாலை எண்.26—ல் செல்லும் வாகன போக்குவரத்து ஓட்டுநர்களுக்கு பார்வை தடையில்லாமலும் எவ்வித இடையூறும் ஏற்படாத வகையிலும் சிலை அமைக்கப்பட வேண்டும், எதிர்காலத்தில் மேற்கண்ட இடம் சாலை அகலப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டிற்குத் தேவைப்படும் தருணத்தில் சிலை அமைப்புக்குழுவினரின் முழுப் பொறுப்பிலும், செலவிலும் அகற்றித்தர முன்வர வேண்டும் என்ற பரிந்துரைகளின் அடிப்படையில் அனுமதி அளிக்கலாம் என புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளார்.

6. நகராட்சி நிர்வாக இயக்குநர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் மேற்படி திருவள்ளுவர் சிலை அமைக்க புதுக்கோட்டை நகர்மன்ற தீர்மானம் எண்.104, நாள் 30.6.2008—ன்படி அனுமதி பெற்று சிலையை நிறுவிக்கொள்ளலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், மாவட்ட ஆட்சியர் புதுக்கோட்டை அவர்கள் தெரிவித்துள்ள நிபந்தனைகளின் அடிப்படையில், மேற்படி மாவட்ட ஆட்சியரின் நிபந்தனைகளுடன் அரசு ஆணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.11.98—ல் உள்ள நிபந்தனைகளின்படி திருவள்ளுவரின் வெண்கல சிலை அமைக்க அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

7. மேற்கண்ட சூழ்நிலையில், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரைத்துள்ளதை ஏற்று, புதுக்கோட்டை நகர் மன்ற தீர்மானம் எண்.104, நாள் 30.6.2008–ல் தீர்மானம் இயற்றப்பட்டநிலையில், அரசாணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.11.1998–ல் விதிக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் விதித்துள்ள நிபந்தனைகளையும் சேர்த்து விதித்து, புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரில் தெற்கு 4ஆம் வீதி, அண்ணா சிலையிலிருந்து ஆலங்குடி செல்லும் சாலையும், கிழக்கு 4ஆம் வீதியும் சந்திக்கும் நகரளவு எண்.5550–ல் சின்னப்பா பூங்காவில் கிழக்குப் பகுதியில், திருவள்ளுவரின் வெண்கலத்தால் செய்யப்பட்ட திருவுருவச் சிலை அமைக்க, புதுக்கோட்டை திருவள்ளுவர் சிலை அமைப்புக் குழுவிற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை.
நகராட்சி ஆணையர், புதுக்கோட்டை நகராட்சி, புதுக்கோட்டை.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலளரின் தனிச் செயலர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9.
இ.கோ/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.